செ.வெ.எண்.12 நாள்.04.12.2020

**பத்திரிக்கை செய்தி**

# தாழ்வான பகுதிகளில், குடிசை மற்றும் பாதிப்படையும் வகையில் உள்ள வீடுகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பு மையங்களுக்கு வந்து தங்க வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திரசேகர் சாகமூரி,இ.ஆ.ப. அவர்கள் வேண்டுகோள்

-----

கடலூர் மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் குறிஞ்சிப்பாடியில் உள்ள பெருமாள் ஏரியில் தண்ணீர் முழுகொள்ளளவை எட்டியுள்ளதையொட்டி, தற்போது 12000 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திரசேகர் சாகமூரி,இஆப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து கடலூர் மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் கடலூர்-விருத்தாச்சலம் தேசியநெடுஞ்சாலை வடலூர் பகுதியில் தேங்கியுள்ள மழைநீரினை ஜே.சி.பி. மூலம் வெளியேற்றப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திரசேகர் சாகமூரி,இஆப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனை தொடர்ந்து, கனமழையால் மேல்பரவனாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மழைநீர் செல்வதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திரசேகர் சாகமூரி,இஆப., அவர்கள் பார்வையிட்டார்.

அதன்பின்னர் கடலூர் மாவட்டம் கம்மாபுரம்-புவனகிரி தேசிய நெடுஞ்சாலையில் கனமழை காரணமாக மழைநீர் தேங்கியுள்ளதை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் உடனடியாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திரசேகர் சாகமூரி,இஆப., அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,**

புரெவி புயல் காரணமாக கடலூர் மாவட்டத்தில் மிக கன மழை பெய்து வருகிறது. அதனடிப்படையில் அனைத்துத்துறை அலுவலர்களையும் வெள்ளத்தடுப்பு பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிவர் புயலின்போது எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை, தற்போதும் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறையின் மூலம் அனைத்து நீர்நிலைகளையும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கடலூர் மாவட்டத்தில் 441 பாதுகாப்பு மையங்களில் உள்ளன. தற்போது அதிகமழை காரணமாக குடிசை வீடுகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பு மையங்களில் தங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 300 ஜே.சி.பி இயந்திரங்கள் தற்போது மழைநீர் வெளியேற்றப்படும் பணியில் இருக்கின்றன. ஊரகவளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை போன்ற அனைத்துத்துறை பணியாளர்களும் தற்போது பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அதிக கன மழையால் ஏரி, குளங்கள் நிரம்பிவருகின்றது, எனவே பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை வெளியே அனுப்பாமல் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

மேலும் அவசர தேவைகளுக்கு மாவட்ட ஆட்சியரனத்தில் இயங்கும் கட்டுப்பாட்டு அறை எண்.1077 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தகவல்களை தெரிவிக்கலாம். மேலும் 04142-220700, 233933, 221383, 221113 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளலாம். கடலூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் செயல்படும் கட்டுப்பாட்டு அறை எண்.04142-231284, சிதம்பரம் சார் ஆட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறை எண்.04144-222256, 290037 என்ற எண்ணிலும், விருத்தாச்சலம் சார் ஆட்சியர் அலவலக கட்டுப்பாட்டு அறை எண்.04143-260248 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

இந்த ஆய்வின்போது பொதுப்பணித்துறை கண்காணிப்பு செயற்பொறியாளர் திரு.ரவிமனோகர், செயற்பொறியாளர் திரு.சாம்ராஜ், விருத்தாச்சலம் வட்டாட்சியர் திரு.சிவக்குமார் உடனிருந்தனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.